Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month **3 Pages** பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 Click - 06
SEPTEMBER 2023 Re. 1

**அறிவிப்பு**

நமது சங்கத்தின் மாத இதழான CVPA NEWS ன் PDF File மாதத்தின் இறுதி வாரத்தில் அதாவது 25 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதிக்குள் சங்க உறுப்பினர்களின் மொபைல் போனுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

இப்படிக்கு
**நியூஸ் ஆசிரியர்**


## 28 ஆவது ஆண்டு CVPA துவக்க விழா மற்றும் குடும்ப விழா 2023 சிறப்பு ஏற்பாடுகள்

நமது சங்கத்தின் 28 ஆம் ஆண்டு துவக்க விழா நிகழ்ச்சி மற்றும் குடும்ப விழா 2023, வரும் அக்டோபர் மாதம் 2ஆம் தேதி, சென்னை புரசை வாக்கம் தர்மபிரகாஷ் திருமண மண்டபத்தில் காலை 9 மணிக்கு தொடங்குகிறது. கொரோனா காலத்தில் சில ஆண்டுகள் தடைபட்டு போய் இருந்த இந்த நிகழ்ச்சி, கடந்த ஆண்டு கடும் நெருக்கடிக்கு இடையே சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று குடும்ப விழா 2022 நடைபெற்றது. ஆனாலும், வழக்கமாக இந்த நிகழ்ச்சியை நடத்த முன் வரும் ஸ்பான்சர்கள், அவர்களுடைய வியாபார மந்த நிலை தொடர்ந்த காரணத்தால் யாராலும் அப்போது பெரிய அளவில் உதவி செய்ய முடியவில்லை. இருப்பினும் , சங்க நிர்வாகிகள் அப்போது எடுத்த முயற்சியின் காரணமாக , சங்கத்திற்கு உதவிய நல்ல உள்ளம் கொண்ட நன்கொடையாளர்கள் உதவிய காரணத்தால் குடும்ப விழா 2022 நடைபெற்று முடிந்தது.


இந்த ஆண்டு நமது சங்கத்தின் 28 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும், குடும்ப விழா 2023, சிறப்பாக அமைய நமது சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் மிகுந்த உற்சாகத்துடன் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்து வருகின்றனர். நமது குடும்ப விழாவில் சங்க உறுப்பினர்கள் தாமாக முன்வந்து கொடை உள்ளத்தோடு இரத்த தானம் செய்து வருகின்றனர். குடும்ப விழாவை சின்னத்திரை புகழ் சௌந்தர்யா பாலு அவர்கள் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைக்க உள்ளார் . ஒவ்வொரு ஆண்டும் இரத்ததானத்துடன் தான் நமது குடும்ப விழா தொடங்குகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டை முந்தும் வகையில் இந்த ஆண்டும் ஏராளமான சங்க உறுப்பினர்கள் இரத்த தானம் செய்ய முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது . இதற்கான இரத்ததான முகாம் வழக்கம்போல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, நமது சங்க உறுப்பினர்கள், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளும் வகையில், அப்போலோ மருத்துவமனையின் மருத்துவ குழுவினர், கண் பரிசோதனை, உடல் பரிசோதனை, நீரிழிவு பரிசோதனை, நுரையீரல் பரிசோதனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அப்போலோ மருத்துவமனை சார்பில் சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை செய்து கொள்ள சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட உள்ளன.

10 மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் குடும்ப விழாவில் கௌரவிக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகையுடன் நினைவு பரிசும் வழங்கப்பட உள்ளன. சின்ன குழந்தைகள் மகிழ்ச்சியுடன் விளையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கான கலை நிகழ்ச்சியும் , குழந்தைகளுக்கான தனித்திறன், மற்றும் அறிவுத் திறன் அறியும் போட்டிகளும், நடைபெறுகிறது. குழந்தைகளுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட உள்ளன. இல்லத்தரசிகள் பங்கு கொள்ளும் வகையில் அவர்களுக்கான கேம் ஷோ நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மதியம் சங்க உறுப்பினர்கள் குடும்பத்தினருடன் அனைவரும் உணவு அருந்தி மகிழ அறுசுவை உணவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த குடும்ப விழா2023ல் ஏராளமான சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு, சங்க நிகழ்ச்சி களுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து இந்த குடும்ப விழா 2023ஐ சிறப்பிப்பார்கள் என்று விழா குழுவினர் எதிர்பார்க்கின்றனர்.



வடசென்னை புது வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் ஹரிஹரன் அவர்களுடைய மகளின் திருமணம் சென்னையில் சீறும் சிறப்போடும் நடைபெற்றது. மணமக்களை ஒளிப்பட கலைஞர்கள் நேரில் சென்று வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் மைசன் ஸ்டுடியோ இல்ல திருமண விழாவில் சங்க பொருளாளர் திரு.பாலு அவர்களும், சங்க துணை தலைவர் திரு.அ.கௌஸ் பாஷா அவர்களும், இனணச்செயலளாளர் திரு.பிரபாகரன் அவர்களும் மணமக்களை நேரில் சென்று வாழ்த்தினார்கள்.

# மாநில சங்க தேர்தலில் போட்டியிட CVPA சார்பாக அனுமதி அளித்த வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்கள்.

மாநில சங்க அமைப்பாளராக
**எஸ். சரவணன்** அவர்களும்,
மண்டலம் 1ன் மண்டல செயலாளராக
**ஏ. கௌஸ்பாஷா** அவர்களும்
போட்டியின்றி தேர்வு

தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேசன் TVPA என்று அழைக்கப்படுகிறது. இந்த அமைப்பில் தமிழகத்தில் உள்ள 32 மாவட்ட சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இது ஒரு மாநில சங்க கூட்டமைப்பாக இருந்து கொண்டு ஏனைய மாவட்டங்களை சிறப்பாக வழி நடத்தி வருகிறது. இந்த மாநில சங்க அமைப்பிற்கு ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 30 பொதுக்குழு உறுப்பினர்களும், 7 செயற்குழு உறுப்பினர்களும், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாவட்ட சங்கத்திலிருந்து மாநில சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவ்வாறு அனுப்பப்படும் பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில சங்க தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மாவட்ட சங்க அனுமதியுடன் மாநில சங்க தேர்தலில் போட்டியிட்டு சங்க நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

அந்த வகையில் 2023- 2025 ஆம் ஆண்டிற்கான மாநில சங்க தேர்தல் தேதி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. இந்த தேர்தலை நடத்தும் தலைமை தேர்தல் அதிகாரியாக சிவகங்கையை சேர்ந்த **துரைநேசன்** நியமிக்கப்பட்டார். இவரோடு இணைந்து தேர்தல் பணியாற்ற வேலூர் சேர்ந்த **விஜய சங்கர்**, விழுப்புரத்தைச் சேர்ந்த சண்முகம், கிருஷ்ணகிரியைச்சேர்ந்த **அன்பரசன்**, கோவையை சேர்ந்த **உபைதுர் ரகுமான்**, கரூரைச் சேர்ந்த **சுபாஷ்**, திருநெல்வேலியைச் சேர்ந்த **தாமஸ் அன்பழகன்**, புதுக்கோட்டையைச் சேர்ந்த **ஸ்ரீதர்** என்கிற **அமீர்ஜான்**, ஆகியோர் 2023-2025 ஆம் ஆண்டுக்கான மாநில சங்க தேர்தலை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மாநில சங்க தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்திக் கொடுக்க முன் வந்தார்கள் அதன்படி 15.09.2023 வேட்பு மனுதாக்கல் சிவகங்கை தொடங்கி 22.09.2023 அன்று வேட்பு மனு தாக்கல் முடிவடைந்தது. அன்றைய தினமே வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. 23.09.23 தேர்தல் போட்டியில் இருந்து விலகிக் கொண்ட வேட்பாளர்கள் வேட்பு மனுவை திரும்பப் பெற்ற பிறகு, அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

மாநில சங்க தலைவர்
**திரு.சிவக்குமார்,** கிருஷ்ணகிரி.
மாநில சங்க பொதுச் செயலாளர்
**திரு. ஸ்ரீதரன்,** திண்டுக்கல்.
மாநில சங்க பொருளாளர்
**திரு .சுரேஷ்** ,தர்மபுரி
மாநில சங்க அமைப்பாளர்
**திரு.சரவணன்**, சென்னை.
மாநில சங்க துணைத் தலைவர் ( 1,2,3,4 )
**திரு.அசோக்**, வேலூர்.
மாநில இணைச்செயலாளர்( 1,2,3,4 )
**திரு. மூர்த்தி**,கோவை.
மாநில இணைச் செயலாளர் ( 5.6.7.8 )
**திரு. ஸ்ரீராம் கண்ணன்**, மதுரை.
மண்டலம் 1,
மண்டலச் செயலாளர்
**திரு.கௌஸ் பாஷா**
மண்டலம் 2
மண்டலச் செயலாளர்
**திரு.மயிலாப்பூரான்** , திருவண்ணாமலை
மண்டலம் -3
மண்டலச் செயலாளர்
**திரு.ஜெகநாதன்**, நாமக்கல்.
மண்டலம் 6
மண்டலச் செயலாளர்
**திரு .குமார்**, மயிலாடுதுறை.
மண்டலம் 7
மண்டல செயலாளர்
**திரு .பாண்டியன்,**
மண்டலம் 8
மண்டலச் செயலாளர்
**திரு .ஐயப்பன்,** கன்னியாகுமரி

இவர்கள் அனைவருமே மாநில சங்க தேர்தலில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அக்டோபர்மாதம் 11 ஆம்தேதிநடைபெறும்மாநில சங்க பொதுக்குழு முடிந்த பிறகு, மண்டலம் 5 ,6,7 ,8 மாநில துணைத்தலைவர் பதவிக்கு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான, திருநெல்வேலி **பொன்னுசாமி** அவர்களுக்கும் கன்னியாகுமரி **ராமசாமி** அவர்களுக்கும் அந்த மண்டலத்தைச் சார்ந்தவர்கள் வாக்களிப்பார்கள். இவர்களைத் தவிர மண்டலம் 4ன் மண்டல செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களான நீலகிரியை சேர்ந்த **அப்துல் ரஷீத்** திருப்பூரைச் சேர்ந்த **சிவகுமார்** ஆகியோருக்கு அந்த மண்டலத்தைச் சார்ந்தவர்கள் வாக்களிப்பார்கள்.

மண்டலம் 5ன் மண்டல செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களான, பெரம்பலுரைச் சேர்ந்த அறிவழகனுக்கும் கரூரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்திக்கும் அதை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தலில் வாக்களிக்க உள்ளனர்.



மாநில சங்க அமைப்பாளர் பதவிக்கு போட்டியிட்ட திரு.எஸ்.சரவணன் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்





மாநில சங்க மண்டலம் 1ன் மண்டல செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட திரு.ஏ.கவுஸ் பாஷா அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்




TVPA தேர்தலில் அமைப்பாளர் பதவிக்கு போட்டியிடசென்னை மாவட்ட சங்கத்தின் அனுமதியோடு சரவணன் அவர்கள் சிவகங்கையில் வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது நமது சங்க நிர்வாகிகளும் மாநில சங்க நிர்வாகிகளும் உடன் இருந்தார்கள்.



தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேசனுக்காக நடைபெற்ற மாநில சங்க தேர்தலில் மண்டல 1ன் மண்டல செயலாளர் பதவிக்கு திரு .கவுஸ் பாஷா அவர்கள் சென்னை மாவட்ட சங்கத்தின் அனுமதியோடு தேர்தலில் போட்டியிட சிவகங்கையில் வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது நமது சங்க நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும் உடன் இருந்தார்கள்.

# பல்ப் (Bulb) மற்றும் டைம் (Time) மோடு

புலிவலம் ரவி (திருச்சி)-9442777240



நமது கேமராவில் சூட்டிங் மோடு வகைகளில் ஒன்றான பல்ப் மோடு பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அது போலவே நிக்கான் கேமராவில் பல்ப் மோடு போலவே அமைந்துள்ள மற்றொரு சூட்டிங் மோடின் பெயரென்ன? அவைகளுக்குள் உள்ள தொடர்புகள் என்ன? வேறுபாடு என்ன? அவைகளின் செயல்பாடுகள் என்ன? என்பதை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பல்ப் மோடு பற்றி நாம் பிலிம் பயன்படுத்திய கேமராவிலிருந்து அறிந்திருக்கிறோம். நாம் பயன்படுத்தும் கேமராக்களில் 30 விநாடி முதல் 1/8000 வரை சட்டர் ஸ்பீடுகள்




உள்ளது. 30 விநாடிகளுக்கு மேல் (தற்போது மிர்ரர்லெஸ் கேமராக்களில் 900 விநாடி வரை) சட்டரை திறந்து வைத்து படமெடுக்க வேண்டிய சூழ்நிலைகளில் நாம் பல்ப் மோடை தேர்வு செய்ய வேண்டும். இதை Long Exposure Mode என்று குறிப்பிடுவர்.

நிக்கான் கேமராவில் மெயின் கமாண்ட் டயலை இடது புறம் சுழற்றிக் கொண்டே வந்தால் ஸ்லோ சட்டர் ஸ்பீடுகளுக்கு பிறகு பல்ப் மோடு வரும்.

பல்ப் மோடை இரவு நேரத்தில் படமெடுக்கும் சூழ்நிலைகளுக்கு அதிகமாக பயன்படுத்தலாம்.

உதாரணமாக Fireworks, Lightning, Light Painting, Night Landscape, போன்றவைகளை படமெடுக்கலாம். இவைகளோடு ப்ளாஸையும் இணைத்து ப்ரண்ட் மற்றும் ரியர் கர்ட்டைன் சிங்கரனைசர் மூலம் வித்தியாசமான படங்களை எடுக்கலாம்.

இப்போது மெயின் கமாண்ட் டயலை இடது புறம் சுழற்றிக் கொண்டே வந்தால் ஸ்லோ சட்டர் ஸ்பீடுகளுக்கு பிறகு பல்ப் மோடும் அதன் பிறகு டைம் மோடும் வரும்.

நிக்கானின் மாடல் ஈ 7200 - இருந்து கேமராக்களில் பல்ப் மோடு போன்று டைம் மோடு என்ற புதிய மோடு உள்ளது.

பல்ப் மோடில் படமெடுக்க சட்டர் ரிலீஸ் பட்டனை அழுத்தி, படமெடுத்து முடித்துவுடன் விரலை எடுத்து விட வேண்டும் அதாவது படமெடுத்து முடிக்கும் வரை தொடர்ந்து அழுத்தி பிடித்து கொண்டே இருக்க வேண்டும். இது மிகவும் கடினமான ஒன்று.

ஆனால் டைம் மோடில் படமெடுக்கும்போது முதல் முறை சட்டர் ரிலீஸ் பட்டனை அழுத்தி விரலை எடுத்து விட வேண்டும். இப்போது சட்டர் திறந்த நிலையிலே இருந்து படத்தை பதிவு செய்து கொண்டிருக்கும். படப்பதிவு போதும் என்ற நேரத்தில் மறுபடியும் இரண்டாவது முறை சட்டர் ரிலீஸ் பட்டனை அழுத்தினால் சட்டர் மூடிவிடும். (இது போன்ற சூழ்நிலைகளில் ரிமோட் கண்ட்ரோலை பயன்படுத்துவது சிறந்தது ஏனெனில் கைகளினால் ஏற்படும் ப்ளரை தவிர்க்கலாம்).

பல்ப் மற்றும் டைம் மோடுகளில் சட்டரை அதிகப்பட்சமாக 30 நிமிடங்கள் வரை திறந்து வைக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இது போன்ற சமயங்களில் கேமராவின் பின்புறம் வியூ பைன்டரின் வழியாக ஒளி உள்ளே செல்வதை தடுக்க வியூ பைன்டர் Eye Piece Cap&I மறக்காமல் பொருத்தி விடவும்.

பல்ப் மோடு என்று பெயர் வந்ததற்கு ஒரு சுவாரசியமான தகவல் உண்டு. என்னவெனில் ஆரம்ப நாட்களில் படமெடுக்க சட்டர் ரிலீஸ் பட்டனில் மேல் ரிலீஸ் வயர்




கார்டுகளை பயன்படுத்துவர். அதுபோல ஒரு வகையானது காற்றின் மூலம் சட்டர் ரிலீஸ் பட்டனை அழுத்தி படமெடுப்பது. இது ஒரு முனையில் குண்டு பல்ப் வடிவில் ரப்பரால் தயாரிக்கப்பட்டிருக்கும். -(பேரூந்துகளில் காற்று மூலம் ஒலிப்பானை அடிக்கும் பல்ப் போன்ற ரப்பர் போல) மறுமுனை சட்டர் ரிலீஸ் பட்டனில் பொருந்தியிருக்கும். பல்ப் வடிவ ரப்பரை அழுத்தும்போது காற்றின் மூலம் சட்டர் ரிலீஸ் பட்டன் இயங்கி படமெடுக்கும். இதுதான் பல்ப் மோடு பெயர் வரக் காரணம்.

எனவே மேலேக்கண்ட இரண்டு மோடுகளில் பல்ப் மோடை விட டைம் மோடு மிகவும் சிறந்தது. எனவே Long exposure mode-ல் படமெடுக்க டைம் மோடை பயன்படுத்தி சிறந்த படங்களை எடுப்போம். நன்றி. அன்புடன் க்ரியேட்டர் தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் கிளப்.

# வருந்துகிறோம்



வடசென்னை கொளத்தூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் ஆர் கே என்கின்ற ஹரிகுமார் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஹரிகுமாரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நமது சங்கம் சார்பாக பொதுக்குழு தீர்மானபடி நமது சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை பத்தாயிரம் ரூபாயை இவருடைய வாரிசுதாரர்களிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Mukttharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 27.09.2023

To